திரு. வே. தங்கப்பாண்டியன் : சொல்லப்படுகிற காரணங்கள் உண்மையானவைதானு என்று அரசு ஆராய்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அரசு தனக்குள்ள அதிகாரத்திற்குட்பட்டு ஆராய்கிறது. அதாவது within its limitations.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

(1) அரசு ஊழியர் மறியல் போராட்டம் குறித்து.

திரு. எம். சங்கரலிங்கம் : மேலவையில், என்.ஜி.ஓ.வினர் போராட்டத்தைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது, அவையின் முன்னவர் அது குறித்து பதிலளிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்ததும், என்.ஜி.ஓ.வினர் விடுதலை செய்து, பேச்சு வார்த்தை நடத்தி நல்ல சுமுகமான முடிவைக் காண்பார்கள் என்று சொன்னர்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட்டு பேச்சு வார்த்தைகளும் நடந்ததாக இந்த அவையிலே அறிவிக்கப்பட்டது.

ஆனல் இன்றையதினம் செய்தித் தாட்களைப் பார்த்தால் பேச்சு வார்த்தை முறிந்துவிட்டதாகவும் என்.ஜி.ஓ.வினர் தரப்பில் வைக்கப்பட்ட 15 கோரிக்கைகளில் ஒன்றுகூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும், நிதியாதாரம் இல்லாத கோரிக்கைகள்கூட ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றும், எனவே அவர்களின் போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவை நடந்து கொண்டிருக்கும்போது, அதிலும் குறிப்பாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரவேண்டிய முக்கியமுள்ள இந்தப் பிரச்சினையில் அரசாங்கத்தின் சார்பில் விவரம் தெரிவிக்கப்படும் என்று நினைத்தேன். எனவே முதலமைச்சர் அவர்களோ அல்லது முதலமைச்சரின் சார்பில் அமைச்சர்களில் யாரேனும் ஒருவரோ இதைப்பற்றித் தெளிவுபடுத்தியிருக்கலாம். இதைப்பற்றி நான் குறை கூறுவதாக நினைக்கக்கூடாது. பத்திரிக்கையில் வந்த செய்தியை வைத்து, இந்த அவைக்கு உண்மை நிலையை விளக்கி விவரம் திந்திருக்கலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதைப்பற்றி அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், பேரவையில் அறிவிப்பு கொடுத்து பிறகு இங்கேயும் அவை முன்னவர் முதல்வரின் சார்பில் விவரம் சொல்லப்பட்டு, என்.ஜி.ஓ.வினர் விடுதலை செய்யப்பட்ட செய்தியும் அவைக்குத் தெரிவிக்கப் பட்டது. அதோடு அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது.

பின் விளைவுகளைப் பற்றி உறுப்பினர் திரு. வே. தங்கப்பாண்டியன் அவர் கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை தகவல் பெறுவதற்காக அனுப்பி வைத்துள்ளேன். அது கிடைத்தபிறகு அந்தத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) வினா நேரத்தில் கொடுக்கப்பட்ட ஒரு விடை குறித்து.

(முற்பகல் 11-30)

திரு. கே. எஸ். கணபதி : துணைத் தலைவரவர்களே, இதை ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கூட எடுத்துக்கொள்ளலாம். அவைத் தலைவர் அவர்களின் பாதுகாப்பை நான் வேண்டுகிறேன். 155 வது கேள்வி நேரத்தின் போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்தச் சட்ட சபையிலே அதைப்பற்றி உத்தரவிட வேண்டும் என்று விரும்புகிறாரா என்று சொன்னார்கள். அது உறுப்பினர்கள் உள்ளத்தைப் புண்படுத்துவது போல, குத்தலாகப் பேசியது போல, அவமானப் படுத்துவதுபோல இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தை எப்படி உள்ளம் புண்படுகிற அளவுக்கு இருக்கிறது என்பதை விளக்குங்கள்.

திரு. கே. எஸ். கணபதி : எதிர்க்கட்சித் தலைவர் சொன்னபோது சொன் னார்கள். அது தொடர்பாக நான் ஒரு துணைக் கேள்வி போடும்போது, அரசு உடனடியாக உத்தரவிடுமா என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்று கேட்டேன். அப்போது அமைச்சர் அவர்கள் உடனடியாக இங்கேயே கையெழுத்துப் போட வேண்டுமா என்று சொன்னார்கள். இந்த நிலையிலே உறுப்பினர்கள் கேட்பதுபோல உத்தரவு பிறப்பிக்க வேண்டுமா என்று சொன்னதாக நினைக்கிறேன். இது இந்த அவை உறுப்பினர்களுக்கு வருத்தத்தைக் கொடுப்பதற்குரிய வார்த்தைகள் என்று எண்ணுகிறேன். இனிமேல் இதுபோல் ஏற்படாமலிருக்க, மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.